# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,101 — 1920 ம் ௵ சித்திரைமீ 30 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களின் விளம்பரம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்துஞ் சேர்ந்த ஐக்கிய இராச்சியத்துக்கும் சமுத்திரத்துக் கப்பாலுள்ள பிரித்தானிய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலனருமாகிய மகத்துவ ஐந்தாவது ஜோர்ஜ் அரசரின் நாமத்தைக்கொண்டு:

அதிகௌரவம்பொருந்திய பாத் வரிசையின் நைற்கொம்மான்டர் என்னும் பட்டிவர்த்தனரும் இலங்கைக்கும் அதனைச்சார்ந்த விடங்கட்கும் ஆட்சி யதிகாரியுமாகிய சேர் கிறேம் தொம்சன் உத்தமனு ரவர்கள் செய்யும்

### விக்ஞாபனம்.

கிறேம் தொம்சன்.

1910 ம் ஆண்டின் நகரசங்கத்தின் கட்டளைச்சட்டங்களின் 109 (1) 110 (15) ம் பிரிவுக்கு அமைய காலி நகரசங்கத்தால் உண்டாக்கப்பட்ட பின்வரும் பிரமாணங்கள் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 109 (3) ம் பிரிவில் குறிக்கப்பட்டபடி அதிகார மந்திரசபையோடுகூடிய ஆட்சியதிகாரியவர்களால் உறுதியாக்கப்பட்டன, ஆதலினாலே:

ஆட்சியதிகாரியாகிய நாம் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 109 (3) ம் பிரிவால் வேண்டியபடி இதனோடிணைத்திருக்கும் உபவிதிகளை வெளிப்படுத்தப்பட்டிருக்கும் துணைப்பிரமாணங்களை யித்தால் விக்ஞாபனஞ் செய்கிறோமென்பதை நீவிரிப்போது அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரவர்களின் வருஷம் ஓராயிரத்துத் தொளாயிரத்து யிருபதா மாண்டின் ஏப்றில் மாசத்து முதலாந் தேதியாகிய இன்று மேற்கூறிய இலங்கைத்தீவி லுள்ள நுவரெலியிலிருந்து விடுக்கப்பட்டது.

உத்தமனுரின் கட்டளைப்படி,

பீ. ஹோர்ஸ்பரோ,

அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

தேவன் அரசரைக் காப்பாராக !

இதன்கீழ்க் காட்டப்படும் உபவிதிகள் சினமொற்றகிறுவ், மாயாதீபம் அல்லது அப்பேற்பட்ட இயந்திரத்தால் காட்டும் காட்சி அல்லது ஒரு டிருமாவை ஆடுகிற காட்சி அல்லது கூத்து, குஸ்தி, ஸர்கஸ் அல்லது நாடகசாலையில் நடக்கும் வேடிக்கைகளில் எதையாவது காட்டும் விநோத பகிரங்கக்காட்சிகளை அடக்கும்.

### அர்த்தங்கள்.

லைசன்ஸ்காறன் என்பது 4 ம் உபவிதியின்படி லைசன்ஸ் பத்திரத்தில் கையொப்பம் வைத்திருக்கும் ஆளை அல்லது ஆட்களைக் கருதும். சங்கத்தலைவ ரென்பது காலி நகரசங்கத்தலைவரைக் கருதும்.

### லைசன்ஸ் எடுக்கவேண்டிய கட்டிடங்கள்.

1. யாராவது ஒரு கட்டிடத்தை, ஒரு கொரட்டை அல்லது ஒரு இடத்தைக் காட்சிகாட்டுகிறதற்காக ஒரு லைசன்ஸ் இல்லாமல் பாவிக்க அல்லது பாவிக்கப்பட விடப்படாது. அப்படி லைசன்ஸ் எடுத்தவன் பின்னுற் காணப்படும் ஏற்பாடுகளுக்கு விரோதமாக அந்த இடத்தில் ஏதாவது நடத்த அல்லது நடப்பிக்கப்படாது.

2. மேற்சொல்லப்பட்ட வகையான ஒரு கட்டிடத்தை, ஒரு கொரட்டை அல்லது ஒரு இடத்தைப் பிரசித்த காட்சிக்காக உபயோகிக்க உத்தரவுஎடுக்கப் பிரியப்படுகிறவன் சங்கத்தலைவரிடம் பின்வரும் குறிப்புகளைக் காட்டி ஒரு விண்ணப்பபத்திரம் கொடுக்கவேண்டும்.

அவையாவது:—

(1) அக்கட்டிடம், கொரடு அல்லது இடம் இருக்கும் ஸ்தானம்.

(2) அதின் மாதிரியும், அது என்னத்தால் கட்டப்பட்டிருக்கிறதென்றும்.

(3) அந்த ஸ்தானத்து உருத்துக்காரனுடைய பெயரும் அவருடைய நியமமான விலாசமும்.

(4) அந்த ஸ்தானத்துக்கு வகைசொல்லுகிற மனேஜருடைய பெயரும் விலாசமும்.

(5) விண்ணப்பம் செய்கிறவனுடைய பெயரும் நியமமான விலாசமும், சொல்லிய கட்டிடத்தில், கொரட்டில் அல்லது இடத்தில் அவனுக்கு இருக்கும் உருத்தையும்.

(6) அந்த இடத்தில் என்ன விதமான காட்சி காட்டுகிறதென்றும்.

(7) எவ்வளவு காலத்துக்கு லைசன்ஸ் வேண்டுமென்றும்.

(8) அக்கட்டிடத்தில் அடக்கக்கூடிய ஆட்களின் தொகையையும், இன்னும் சங்கத்தலைவரால் தேள்வைப்படுத்தும் காரீணங்களும், அந்தக் கட்டிடத்தின் உயரத்து மட்டமும், காமராக்களின் தொகையையும் இரண்டு படமும் கூட அந்தக் கட்டுமானம் இருக்கும் நிலையையும், அதுக்குக்கிட்ட இருக்கும் கட்டுமானங்களையும் பிரசித்த வீதிகளையும் காட்டி இரண்டு படமும் கூட விண்ணப்பம் செய்கிற பத்திரத்துக்கு சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

அப்படிச் செய்துகொடுக்கிற படத்தில் இஸ்தோப்பு, போக்குவரவு செய்கிற வாசல்கள், பிரதானமான கதவுகள் வெளிக்கிப்போகிற வாசக்கடைகளுடைய நெடுப்பமும் அகலமும் காட்டி இருக்கவேண்டும்.

லைசன்ஸ் கொடுக்கிறது.

3. லைசன்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைத்தபொழுது சங்கத்தலைவர் வேண்டிய அளவு விசாரணைசெய்த பிறகும், 5 ம் உபவிதியின்படி சேரவேண்டிய செலவு கட்டினதின் பிறகும் லைசன்ஸ் அவர் தேவை என்று நினைக்கிற பிரமாணங்களுக்கு அமையக் கொடுப்பார்; அப்பிரமாணங்களாவது அந்தக் கட்டுமானத்துக்கு போக்குவரவு செய்கிற வாசல்களின் அகலமும் அதின் தொகையையும் அந்தக் கதவுகள் தொறக்கிற விபரமும் அதின் உள்ளுக்கு போகக்கூடிய மனிதரின் முளுத்தொகையும் அதின் வெளிச்சத்தின் மாதிரியும், அதில் நெருப்பு சொலற்றி அல்லது வெடிச்சி நெருப்பு பிடிக்கிற வைகளில் நின்றும் காரமானம் பண்ணுகிறவைகளும், நெருப்பு நூக்கிறதற்கு தேள்வையானவைகள் எடுக்க இடம் வைத்துக்கொள்ளுகிறதும், சுருட்டு குடிக்கிறதற்குத் தடைபண்ணியும், காத்துவருகிறதற்கு இடைவைக்கவும் வேண்டும்.

4. இத்துட னிணைக்கப்படும் A அடையாளமிட்ட மாதிரிக் கடுதாசியில் சங்கத்தலைவரால் லைசன்ஸ் கொடுக்கப்படும். இந்த சட்டத்தின் கீழ்க்கொடுக்கப்படும் லைசத்தை சங்கத் தலைவருக்கு வேண்டிய நேரம் திருப்பி எடுக்கவும், தடை பண்ணவும் அல்லது மாத்தவும் கூடும்.

விதானங்கள்.

5. கீழ்க்குறிக்கும் வீதம்படி விண்ணப்பக்காரன் லைசன்ஸ் பெற முந்தி செலவு கட்டவேண்டும்.

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு லைசன்ஸ் (மார்கழிமாத 31 ந் திகதி முடியும் வரையும்) | .. | 125 | 0 |
| ஒரு மாதத்துக்கு ஷை .. .. | .. | 25 | 0 |
| ஒரு நாளைக்கு ஷை .. .. | .. | 2 | 50 |

வருஷாந்த லைசன்ஸ் கொடுக்கப்படும் கட்டுமானங்கள் நெருப்புப் பிடிக்கக்கூடாத வஸ்துவால் கெட்டினதென்று சங்கத்தலைவர் யோசினை பண்ணினால் தான்.

6. மேற்சொல்லப்பட்ட 4 ம் உபவிதியின் லைசன்ஸ் கொடுத்த ஒரு கட்டிடம், கொரடு அல்லது இடத்துக்கு சங்கத்தலைவரிடம் உத்தரவுபெற்ற பின்னல்லாமல் ஒரு மாற்றமும் செய்யக்கூடாது.

7. இதன் கீழ்ச் சொல்லப்படுகிற காட்சிகள் காட்டுகிறதற்கு இந்த உபவிதிகளுக்கு மாற்றமில்லாமல் சங்கத்தலைவர் பிரியமானால் லைசன்ஸ் கொடுக்கக் கூடும், அவையாவது:—

(a) வாரபோர ஸர்கஸ் ஒன்று காட்டுகிறதற்கும்.

(b) மயிதானத்தில் பிரசித்தக் காட்சி ஒன்று காட்டுகிறதற்கும்.

(c) இரண்டாம் சட்டத்தின் பிரகாரம் லைசன்ஸ் ஒன்று பெற்றுக்கொள்ள விண்ணப்பமில்லாமல் காசு உண்டாமல் அல்லது இல்லாமல் பிரசித்தக் காட்சி ஒன்று காட்டுகிறதற்கு ஒரு கட்டுமானம் கொஞ்சநாளைக்குப் பாவிக்கவும்.

நெருப்புப்பிடித்தலைத் தடுப்பதற்காகிய வழிவகைகள்.

8. நெருப்புப்பிடியாதவண்ணம் அல்லது பிடித்த நெருப்பை நூக்கிறதற்காக லைசன்ஸ்காறன் தேள்வையான அளவு தண்ணீரும் உபகரணங்களும் வைத்திருக்கவேண்டும். சங்கத்தலைவரின் கட்டளைப்படி ஜலசூத்திரம், தண்ணீர்பாச்சும் குளல், தண்ணீர் நிறம்பிய வாளிகள், கம்பிளி அல்லது துணித்துண்டுகளும் காய்ந்த மணலும் வைக்கவேண்டுமென்று குறிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். சங்கத்தலைவர் சம்மதிகொடுத்தவும் அக்காணியின் சொந்தக்காரனால் சம்பளம் கொடுக்கப்படவேணுமாகிய ஒரு ஆள் மேற்குறித்த கருவிகளை எப்பொழுதும் ஆயித்தமாய் வைத்திருக்கும்படி நியமிக்கப்படவேண்டும். நெருப்புப்பிடிக்கக்கூடிய அல்லது வெடிக்கக்கூடிய சாமான்களாகிய மண்ணெண்ணெய் பெற்றோல், சாபையிற், வெடிமருந்து அல்லது அப்படிப்பட்ட வேறு சாமான்கள் ஒரு நாளைக்குத் தேவையான அளவுக்கு மேலதிகமாக லைசன்ஸ் கொடுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்கப்படாது.

சினமொற்றகிறுவ் இயந்திரத்தில் நெருப்புப்பிடியாதபடிக்கு எச்சரிப்புகள்.

9. (a) சங்கத்தலைவரிடத்திலிருந்து எழுத்துமூலமாக உத்தரவுபெறுமல் சினமொற்றகிறுவ் இயந்திரத்தை அல்லது கருவியை சனங்கள் இருந்து பார்க்கும் அறைக்குள் அல்லது கட்டிடத்துக்குள் வைக்கப்படாது.

(b) இயந்திரம் வைத்திருக்கும் அறை நெருப்புப்பிடிக்கக் கூடாததாயும் மூன்று வாசல்கள் உள்ளதாயும் ஒவ்வொன்றும் 12 இஞ்சுக்கு மேற்படாத அகலம் உள்ளதாயும் இருக்கவேண்டும். அதில் இரண்டு வாசல்கள் படம் காட்டுகிறதற்கும் மற்றது படம் காட்டுகிற ஆள் பார்க்கிறதற்குமா யிருக்கவேண்டும்.

(c) படத்துக்கிட்ட 6 அடிக்குக்குறைய ஒரு இடத்தில் அல்லது இயந்திரம் இருக்கும் அறைக்குள் சுருட்டுக்குடிக்கப்படாது.

(d) ஒரு வாளி காய்ந்த மணலும் ஒரு கம்பிளி அல்லது துணித்துண்டும் இயந்திரம் இருக்கும் அறைக்குள் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

(e) காட்சி காட்டும் வேளையில் இயந்திரம் இருக்கும் அறைக்குள் காட்சி காட்டுகிறவனுட்பட மூன்றுபேருக்கு மேலதிகமாக எக்காலத்திலும் இருக்கப்படாது.

(f) இயந்திர அறை காட்சிகாட்டுகிற கட்டிடத்துக்குள்ளிருந்தால் அந்த இடத்திலிருந்து சுற்றவர 6 அடி தூரத்தில் ஏதும் ஆசனங்கள் போடப்படாது.

(g) ஒருதரத்துக்காட்சிக்கு தேள்வையான படங்கள் மாத்திரம் இயந்திர அறையில் வைத்திருக்கலாம். மற்றதுகள் எல்லாம் காட்சிகாட்டும் கட்டிடத்திலிருந்து தூரத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(h) இயந்திரத்தில் போடப்படாத படங்கள் லோகவகையாற் செய்த பெட்டிகளுள் வைத்துப் பூட்டப்பட்டிருக்க வேண்டும். இயந்திரத்தில் போடப்படும் படங்கள் லான்ரேணிலிருந்து வரவரச் சுருளாகச் சுத்தப்பட்டு, கல்நாரால் லையின் பண்ணப்பட்ட பெட்டிக்குள் போடப்படவேண்டும். சங்கத்தலைவர் தேவையென்றால் இயந்திரத்திலிருந்து புறப்படும் காங்கையை அடக்குகிறதற்கு இயந்திரத்துக்கு முன் ஒரு கண்ணாடி தொட்டியில் சீனக்காரத்தண்ணீர் வைக்கவேண்டும்.

### காற்று உலாவுதல்.

10. மேல்சொல்லப்பட்ட அறைகள் எங்கும் சங்கத்தலைவருடைய சம்மதிக்கு ஏற்க நல்லாய் காற்றுபிடிக்கக்கூடிய விதமாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட காற்றுவரும் வாசல்கள் எல்லாம் படத்தில் காட்டப்பட்டு இருக்கவேண்டும்.

### போக்குவரவுசெய்கிற வாசல்கள்.

11. அப்படிப்பட்ட கட்டிடங்கள் எல்லாத்திலும் 300 பேரை கொள்ளக்கூடிய இடத்துக்கு இரண்டு போக்கு வரவுசெய்கிற வாசல்கள் இருக்கவேண்டும். ஸ்டேஜ் என்னும் காட்சிமேடையிலிருந்து போக்குவரவு செய்வதற்கு இரண்டு நேர்வளிகளும் உடுத்தும் அறைகளிலிருந்து போக்குவரவு செய்வதற்கு ஒரு வளியும் விடப்பட்டிருக்க வேண்டும்.

11. (a) ஒவ்வொரு போக்குவரவுசெய்யும் வாசல்களும் 5 அடி அகலத்துக்கு குறையாமலிருத்தல் வேண்டும். அவைகள் ஒரு வெளி நிலத்துக்கு அல்லது பகிரங்க பாதைக்கு போகக்கூடியதாயும் இருக்கவேண்டும். அந்த வாசல்களுக்குமேல் அதைப்பற்றி சங்கத்தலைவரின் திருப்திகரத்துக்கு 7 இஞ்சு பெருப்பமுள்ள எழுத்தில் அறிவித்தல் போடப்பட்டிருக்க வேண்டும்.

(b) போக்குவரவுசெய்யும் வாசல்கள் ஒவ்வொன்றுக்கும் மேலே ஒரு லாம்பு போட்டு அதின் கண்ணாடியில் "போக்குவரவுசெய்யும் வாசல்" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். அது கட்டிடத்திலிருக்கும் விளக்குகளுடன் சம்பந்தமில்லாமல் பிறம்பான விளக்காயும் இருக்க வேண்டும்.

(c) வெளியேபோகும் வாசல்களின் கதவுகள் போடப்பட்டிருந்தால் அக்கதவுகள் வெளியே திறக்கக்கூடியதாயும் இறங்குமிடங்களைத் தடுக்காமல் இருக்கவும் வேண்டும்.

(d) எல்லாப் பாதைகளும் எப்பொழுதும் வெளியாயிருக்கவும் தடைபண்ணப்படாமல் இருக்கவும் வேண்டும்.

### கற்கூசுகள்.

12. அப்படிப்பட்ட இடங்களின் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளுக்கு வெவ்வேறையாக கற்கூசும் ஆண்பிள்ளைகளுக்கு சலம் இடமும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

### காட்டும் காட்சியின் கொன்றுரோல்.

13. (a) சங்கத்தலைவர் பிரசித்தகாட்சி நடக்கப்போகிறதென்பதையும் அப்படிப்பட்ட காட்சி உத்தரவில்லாமல் நடத்தப்படக்கூடாதென்பதை அறியவரும்பொழுது பிரசித்த அறிவித்தலால் அப்படிப்பட்ட காட்சியை உத்தரவு எடுக்கும் வரையும் தடைபண்ணிவைக்க இயலும்.

(b) 13 (a) ம் உபவிதியின் பிரகாரம் தடைபண்ணப்பட்டிருக்கும் காட்சிகளை நடத்தப்பிரியப்படுகிறவன் சங்கத்தலைவரிடம் இருந்து உத்தரவுகேட்கலாம். ஆனால் அப்படிப்பட்ட உத்தரவுகொடுக்குமுன் யாராகுதல் அப்படிப்பட்ட காட்சியை நடத்த அல்லது நடப்பிக்கக்கூடாது. உத்தரவு கேட்கிற ஆள் விண்ணப்பத்தில் காட்டப்போகிற காட்சியின் விவரமும் ஆளினுடைய பேரும் மேல்விலாசமும் சங்கத்தலைவர் கேட்கும் வேறும் விவரங்களும் காட்ட வேண்டும்.

14. விண்ணப்பம் கிடைத்தவுடன் சங்கத்தலைவர் தனக்கு அல்லது தன்னால் நியமிக்கப்படும் ஒருஆளுக்கு காட்டப்போகிற காட்சியைக் காட்டும்படி அல்லது தெளிவாக விளங்கப்படுத்தும்படி கேட்பார்.

15. 13 ம் உபவிதியில் காட்டியிருக்கும் விண்ணப்பத்தையும் 14 ம் உபவிதியில் காட்டியிருக்கும் காட்சியை அல்லது விவரத்தையும் பார்த்தபிறகு சங்கத்தலைவர் அவருடைய விருப்பப்படி உத்தரவுகொடுப்பார். அப்படிப்பட்ட உத்தரவு B என்னும் மாதிரிக் கடுதாசியில் கொடுக்கப்பட்டு காட்சியின் மாதிரியும், காட்சிக்கு பொறுப்பாயிருக்கிற ஆளின் பெயரும் இடமும், என்ன நேரத்துக்குள்ளும் என்ன நிபந்தனங்களுக்குட்படவும் காட்டப்படும். ஒரு காட்சி காட்டுகிறதற்காக உத்தரவுகொடுக்கப்பட்டிருந்தால் யாராவது அதில் குறித்திருக்கும் நிபந்தனங்களுக்கு எதிராக வேறு காட்சி நடத்த அல்லது நடப்பிக்கப்படாது.

16. 15 ம் உபவிதியின்படி கொடுக்கப்படும் உத்தரவு சங்கத்தலைவருடைய விருப்பப்படி எந்த நேரத்திலாவது தடுத்துவைக்க அல்லது அளிக்க அல்லது திருத்தவும் கூடும்.

17. சங்கத்தலைவர் யாராகுதல் ஒரு காட்சியைக் காட்டுகிறவர் அல்லது ஒரு காட்சியைக் காட்ட விரும்பினால்; லைசன்ஸ் எடுத்திருந்தால் அவரை அல்லது அவரில் ஒருவரை அல்லது பலரை தனக்கு அல்லது தான் நியமிக்கும் இன்னும் ஒருதருக்கு காட்டி அல்லது காட்ட இருக்கிறகாட்சியை அல்லது அதின் எப்பகுதியாவது காட்டும்படியும் தனக்கு அல்லது தன்னால் நியமிக்கப்படுபவர்களுக்கு அக்காட்சியின் அல்லது அதின் எப்பகுதியின் விவரத்தையும் கொடுக்கும்படி கேட்கலாம்.

18. சங்கத்தலைவர் எழுத்தில் எவ்விடத்துக்குக் கொடுத்த லைசன்ஸ் பெற்றவரை அல்லது வேறெவரையாவது எந்த நேரத்திலும் வேறு பிரசித்த காட்சியை அல்லது அதின் எப்பகுதியையும் தடுக்கலாம். அக்காட்சியை அல்லது அதின் பகுதியையாவது காட்டுகிறதற்கு அவசரமென்றுகாணும் நிபந்தனங்களுக்கும் ஏற்பாடுகளுக்குமமையக் கொடுப்பார்.

### ஆட்கள் அதிகப்படாமல் தடைகள்.

19. (a) கட்டிடத்துக்குள் ஆட்கள் நிறம்பினவுடன் அவ்விடத்துக்கு வெளியே அதைப்பற்றிய அறிவித்தல் போடப்படவேண்டும். 19 (b) ம் உபவிதியின் பிரகாரம் நிற்கக்கூடியவர்களைவிட மேலதிகமானவர்களை லைசன்ஸ் பெற்றவர் விடப்படாது.

(b) அதற்கென்று குறிக்கப்பட்ட இடங்களில் அல்லாமல் வேறு இடங்களில் ஆட்கள் நிற்கப்படாது. போக்குவரவுசெய்யும் வாசல்களையும் தடைபண்ணக்கூடியவிதமாய் நிற்கவும்படாது.

பூட்டப்படும் நேரம்.

20. எந்த விசேஷ தினத்திலாவது ஒரு காட்சியும் சங்கத்தலைவருடைய விசேஷ உத்தரவு இல்லாமல் இரா ஒரு மணிக்குப்பின் நடத்தப்படாது.

ஓடர்வைக்கிறது.

21. முதலாளியார் மதுபானம் பாவித்தவனை இந்த இடத்தில் நிற்க அல்லது உட்பிரவேசிக்க விடப்படாது.

சோதினைபண்ணுகிறதற்கு உட்பிரவேசிக்கும் வழிவகைகள்.

22. இக்காணிகளைச் சோதித்து குறிக்கப்பட்ட உபவிதிகள் கவனிக்கப்படுகிறதோ வென்பதை பார்க்கிறதற்கு சங்கத்தலைவரால் அல்லது காலி பொலிஸ் சுப்பிறின்றெண்டனால் எழுத்தில் உத்தரவுகொடுக்கப்பட்டவர்களுக்கு உள்ளே போய்ப் பார்ப்பதற்கு விடவேண்டும்.

தண்டனைகள்.

23. குறிக்கப்பட்ட உபவிதிகளை அல்லது சங்கத்தலைவருடைய கட்டளையை அல்லது தடையை மீறி நடப்பவர்கள் குற்றவாளிகள் ஆவார்கள். (a) 50 ரூபாவுககு மேற்படாத குற்றமும், குற்றம் நெடுகே நடந்துவந்தால் அது நடக்கும் ஒவ்வொரு நாளைக்கும் 25 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமும், (b) சங்கத்தலைவரிடமிருந்து எழுத்தில் மீறி நடப்பதைத் தடுக்கும்படி அறிவித்தல்பெற்ற பிற்பாடு குற்றம்நடந்துவந்தால் ஒவ்வொரு நாளைக்கும் 25 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமும் கொடுக்கவேண்டும். மேற்குறித்த உபவிதிகளின் சொந்தக் காணியில் சனங்கள் வராமல் நடக்கும் காட்சிகள் அடங்கவில்லை.

A மாதிரிக் கடுதாசி.

4 ம் உபவிதியின்படி கொடுக்கும் லைசன்ஸ்.

1. லைசன்ஸ்காறனுடைய பேரும் விலாசமும் :————.
2. லைசன்ஸ்கொடுக்கப்பட்ட காணியின் மனேஜரின் பேரும் விலாசமும் :————.
3. லைசன்ஸ்கொடுக்கப்பட்ட காணியுடைய விவரமும் இருக்குமிடமும் :————.
4. லைசன்ஸ்கொடுக்கப்பட்ட காணியின் விசாலம் :————.
5. ஒரு தரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஆட்களின் தொகை :————.
6. கொள்ளக்கூடிய ஆட்களினுடைய முழுத்தொகை :————.
7. இடம் திறந்திருக்கக்கூடிய மணித்தியாலங்கள் :————.
8. அக்காணிகள் பாவிக்கப்படும் காரணங்கள் :————.
9. போக்குவரவுசெய்யும் வாசல்களுடைய தொகை :————.
10. கொடுக்கும் விதானத்தின் தொகை :————.
11. லைசன்ஸின் கடைசிநாள் :————.
12. 3 ம் உபவிதியின் பிரகாரம் லைசன்ஸ் கொடுக்கிறவர் கொடுக்கும் ஒழுங்குகள் :————.

இந்த லைசன்ஸ் கீழ்க்குறிக்கும் நிபந்தனங்களுட்பட கொடுக்கப்பட்டிருக்கிறது.

(1) லைசன்ஸ் சங்கத்தலைவருடைய அனுமதியில்லாமல் லைசன்ஸ் மாறிக்கொள்ள இயலாது.
(2) 5 ம் கலத்தில் குறித்த தொகையைத் தவிர அதற்கு மேலே ஒரு தரத்தில் உள்ளே விடப்படாது.
(3) 9 ம் கலத்தில் காட்டப்பட்டிருக்கும் போக்குவரவுசெய்யும் வாசல்கள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கும்.
(4) 7 ம் கலத்தில் காட்டப்படும் மணித்தியாலங்களைத் தவிர வேறு நேரத்தில் அவ்விடம் திறந்திருக்கப்படாது.
(5) 8 ம் கலத்தில் காட்டப்படும் காரணத்துக்காக அல்லாமல் வேறொன்றுக்கும் பாவிக்கப்படாது.
(6) 12 ம் கலத்தில் காட்டும் பிரகாரங்கள் கவனிக்கப்பட வேண்டும்.
(7) சனங்களுடைய நன்னடத்தையைப் பங்கப்படுத்தக்கூடிய படங்கள் காட்டப்படாது.

இடம் :————. கையொப்பம் :————.
திகதி :————. உத்தியோகம் :————.
லைசன்ஸ்காறனுடைய கையொப்பம் :————.

B என்னும் மாதிரிக்கடுதாசி.

15 ம் உபவிதியின் பிரகாரம் கொடுக்கப்படும் உத்தரவு.

1. காட்சிக்கு உத்தரவாதியாகிய ஆளின் பெயர் :————.
2. காட்சி காட்டும் இடம் :————.
3. காட்சி காட்டும் மணித்தியாலங்கள் :————.
4. காட்டப்படும் காட்சியின் விவரமும் மாதிரியும் :————.
5. உத்தரவு கொடுக்கும் உத்தியோகஸ்தருடைய ஏதும் விசேஷ குறிப்புகள் :————.

கீழ்க்குறிக்கும் நிபந்தனங்களுட்பட உத்தரவுகொடுக்கப்பட்டிருக்கிறது.

(1) உத்தரவு கொடுத்த உத்தியோகஸ்தருடைய அனுமதியுடன் மாத்திரம் மாற்றுதல் செய்யலாம்.
(2) 2 ம் கலத்தில் காட்டப்படும் இடத்திலும் 3 ம் கலத்தில் காட்டப்படும் நேரங்களிலுமல்லாமல் காட்சி காட்டப்படாது.
(3) 4 ம் கலத்தில் காட்டப்படும் காட்சி அல்லது வேறு காட்சி காட்டப்படாது.
(4) 5 ம் இலக்கத்தில் காட்டப்படும் குறிப்புகள் கவனிக்கவேண்டும்.

இடம் :————. கையொப்பம் :————.
திகதி :————. உத்தியோகம் :————.

## காணி விற்பனவுகள்.

**No. 1516, E. P.**—1920 ம் ஆண்டு ஆனிமாதம் 15 ௳ திகதி, காலை 10 மணியளவில் தன் ஆபிசில் கீழ்மாகாணத்து திரிகோணமலை டிஸ்திக் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனைவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். அறுபத்தொன்பது (69) காணித்துண்டுகள், கீழ்மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக் தம்பலகாமப்பற்றும், கட்டுக்குளம் கிழக்கும் மேற்குப் பகுதிகளி லிருக்கின்றன.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 4,197. குறிச்சி—நாச்சிக்குடா. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 297 | கவாட்டிக்குடா .. | உசன்சா அனிப்பு .. | .. தென்னைக்குத் தகுந்தது | 2 | 1 | 6 | 17·50 |
| | பிளான் இலக்கம் 5,441. குறிச்சி—வெள்ளைமணல். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 3 | வெள்ளைமணல்பூமி .. | ஏ. ஆமாத்தால் கூட்டியடைக்கப்பட்டது | தென்னந்தோட்டம் .. | 0 | 2 | 12 | 25 |
| 4 | ஷை .. | கே. காசிநீனும் வெறொருவரும் கூட்டியடைத்தது | ஷை .. | 0 | 3 | 38 | —* |
| | பிளான் இலக்கம் 5,437. குறிச்சி—ஆலங்கேணி. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 5 | ஆலங்கேணி பூமி .. | ரீ. சின்னையாவால் கூட்டியடைக்கப்பட்டது | ஷை .. | 0 | 2 | 30 | 40 |
| 6 | ஷை .. | பொதுவிற்பனவுக்காக .. | சேனைக்குத் தகுந்தது .. | 0 | 1 | 28 | 15 |
| 7 | ஷை .. | என். வேலுப்பிள்ளையால் கூட்டியடைக்கப்பட்டது | தென்னந்தோட்டம் .. | 0 | 1 | 37 | 50 |
| | பிளான் இலக்கம் 5,450. குறிச்சி—தம்பலகாமம். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | மாக்கைத்திடல் .. | கோணநாயகர் கோயில் மனேஜர் கே. கதிராமத்தம்பி | வெண்தரை .. | 0 | 2 | 20 | 25† |
| | பிளான் இலக்கம் 5,518. குறிச்சி—திருக்கைக்குடா. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | காதர்முகைதீன்வளவு | எஸ். காதர்முகைதீனால் கூட்டியடைக்கப்பட்டது | குடியிருக்கிற வளவு .. | 0 | 0 | 4 | 75 |
| 2 | திருக்கைக்குடாகாடு .. | வீ. பக்கீர்தம்பியால் கூட்டியடைக்கப்பட்டது ஷை .. | பள்ளிவாசலிருக்கிற வெண்தரை | 0 | 1 | 14 | 20 |
| 3 | ஷை .. | — .. | .. வழிக்காகவிடப்பட்டது | 0 | 0 | 3 | —‡ |
| | பிளான் இலக்கம் 5,365. குறிச்சி—கந்தளாய். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | லமகுரியன்காடு .. | — .. | .. நீர்வாய்க்காலுக்காக விடப்பட்டது | 6 | 0 | 4·4 | —‡ |
| 2 | ஷை .. | — .. | .. ஷை .. | 3 | 2 | 29·8 | —‡ |
| 3 | பேராதுவெளிவாய்க்கால்கட்டு | — .. | .. ஷை .. | 3 | 1 | 38·5 | —‡ |
| 4 | ஷை .. | — .. | .. ஷை .. | 2 | 3 | 0·8 | —‡ |
| 5 | பேராத்துவெளிவளவு | — .. | .. ஷை .. | 0 | 0 | 1·2 | —‡ |
| 6 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 5·9 | —‡ |
| 7 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 6 | —‡ |
| 8 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 3·5 | —‡ |
| 9 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 7·8 | —‡ |
| 10 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 9·7 | —‡ |
| 11 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 4·7 | —‡ |
| 12 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 4·7 | —‡ |
| 13 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 11 | —‡ |
| 14 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 7 | —‡ |
| 15 | பள்ளிவாசல் .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 23·6 | —‡ |
| 16 | பேராத்து வெளி வளவு | — .. | .. ஷை .. | 0 | 0 | 4·6 | —‡ |
| 17 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 9 | —‡ |
| 18 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 10·9 | —‡ |
| 19 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 3·9 | —‡ |
| 20 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 4·5 | —‡ |
| 21 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 6·3 | —‡ |
| 22 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 16·7 | —‡ |
| 23 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 6·5 | —‡ |
| 24 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 18·5 | —‡ |
| 25 | ஷை .. | — .. | .. ஷை .. | 0 | 0 | 12·9 | —‡ |
| 26 | ஷை .. | — .. | .. ஷை .. | 1 | 1 | 29·2 | —‡ |
| 27 | ஷை .. | — .. | .. ஷை .. | 2 | 1 | 5·9 | —‡ |
| | பிளான் இலக்கம் 5,276. குறிச்சி—நிலாவெளி. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | ஆள்வாப்பிள்ளை தோட்டம் | காலஞ்சென்ற ஆள்வாப்பிள்ளையால்கூட்டியடைக்கப்பட்டது | நீர்வாய்க்காலுக்காக விடப்பட்டது | 0 | 1 | 34 | 1,000 |

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம் ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| பிளான் இலக்கம் 5,445. குறிச்சி—நிலாவெளி. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | புதுவெளிவயல் .. | கே. யூ. அப்துல் றயிமானால் கூட்டியடைக்கப்பட்டது | நெல்வயல் .. | 0 | 1 | 26 | 25§ |
| 4 | சின்னப்பொடியன்தரை | எம். பீ, இபுருகிமால் ஷை .. | ஷை .. | 0 | 1 | 36 | 35§ |
| 7 | பள்ளமடுவெடிப்புலவு .. | — .. .. | நீர்வாய்க்காலுக்காக விடப்பட்டது | 0 | 3 | 16 | —‡ |
| 8 | சின்னப்பொடியன்தரை | — .. .. | ஷை .. | 0 | 1 | 13 | —‡ |
| 9 | லெவ்வைதரை .. | — .. .. | ஷை .. | 0 | 2 | 0 | —‡ |
| பிளான் இலக்கம் 5,402. குறிச்சி—கோமரசங்கடவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 4 | டெகிகாகவத்தை .. | கே. வன்னிகாமியால் கூட்டியடைக்கப்பட்டது | குடியிருக்கிற வளவு .. | 0 | 0 | 8 | 25 |
| பிளான் இலக்கம் 5,505. குறிச்சி—கோமரசங்கடவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | அக்கரவெல .. | பி. கிரிகாமி .. .. | நெல்லுக்குத்தகுந்த காடு | 1 | 1 | 10 | 15 |
| 2 | ஷை .. | — .. .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 1 | 5 | —‡ |
| பிளான் இலக்கம் 5,508. குறிச்சி—டிவுளாவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | குடாஅக்கரவெல .. | எஸ். சங்கா .. .. | நெல்வயல் .. | 1 | 0 | 4 | 17·50 |
| பிளான் இலக்கம் 5,370. குறிச்சி—டிவுளாவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | மிலிகாகவத்தை .. | — .. .. | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 13 | —‡ |
| 2 | ஷை .. | எஸ். புஞ்சாவால் கூட்டியடைக்கப்பட்டது | தென்னந்தோட்டம் .. | 0 | 2 | 37 | 20 |
| 3 | ஷை .. | எஸ். சங்கிதாவால் ஷை .. | ஷை .. | 0 | 1 | 2 | 20 |
| 4 | ஷை .. | எஸ். நாகாத்தையால் ஷை .. | குடியிருந்து தோட்டஞ் செய்யத்தகுந்த பூமி | 0 | 1 | 24 | 20 |
| 5 | ஷை .. | — .. .. | வழிக்காக விடப்பட்டது | 0 | 0 | 9 | —‡ |
| 6 | ஷை .. | பீ. சுதெனுவால்கூட்டியடைக்கப்பட்டது | தென்னந்தோட்டம் .. | 0 | 2 | 15 | 20 |
| 7 | ஷை .. | — .. .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 2 | 17 | —‡ |
| பிளான் இலக்கம் 4,935. குறிச்சி—திரப்பனே. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | டம்பகாவெல .. | பீ. கப்புருளை .. .. | நெல்லுக்குத்தகுந்தது | 1 | 0 | 16 | 20 |
| பிளான் இலக்கம் 5,085. குறிச்சி—வில்பனுகுளம். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | குடாவெல .. | கே. கிரிகாமியும் வேறொருவரும் .. | நெல்வயல் .. | 1 | 3 | 5 | 20 |
| பிளான் இலக்கம் 5,385. குறிச்சி—வில்பனுகுளம். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | டிம்பிரிசாகவத்தை .. | என். மணிக்கிருளையால் கூட்டியடைக்கப்பட்டது | நெல்லுக்குத்தகுந்தது | 0 | 3 | 37 | 20 |
| பிளான் இலக்கம் 5,386. குறிச்சி—வில்பனுகுளம். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | பகாலவெலலந்தா .. | பொதுவிற்பனவுக்காக .. | நெல்லுக்குத் தகுந்தது | 0 | 1 | 32 | 20 |
| 2 | பாகலவெல .. | கே. கந்தாத்தையும் மறுபேரும் கூட்டியடைத்தது | நெல்வயல் .. | 1 | 3 | 34 | 20 |
| பிளான் இலக்கம் 4,916. குறிச்சி—கிவுளக்கடவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | பகலக்கரவெல .. | கே. கப்புருளை .. .. | நெல்வயல் .. | 1 | 2 | 12 | 25 |
| பிளான் இலக்கம் 5,249. குறிச்சி—மதவாச்சி. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | தவுளுவீவைபகாலவெல | பீ. கப்புருளையும் பி. மல்லாமியும் .. | நெல்வயல் .. | 3 | 3 | 17 | 16 |
| 2 | தவுளுவீவை இகாலவெல | டீ. பின்காமியும் பீ. வண்ணக்குருளையும் | ஷை .. | 1 | 0 | 32 | 16 |
| 3 | ஷை .. | கே. வன்னிகாமி .. .. | ஷை .. | 1 | 0 | 28 | 16 |
| பிளான் இலக்கம் 5,511. குறிச்சி—கம்பாக்கோட்டை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | | |
| 1 | குளக்கட்டுத்துண்டு | — .. .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 37 | —‡ |
| 2 | மாமரத்தோட்டம் .. | வீ. காத்திகேசு .. .. | தென்னந்தோட்டம் .. | 0 | 3 | 35 | 16 |
| 3 | ரோட்டடித்துண்டு .. | — .. .. | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 16 | —‡ |
| 4 | வெட்டை .. | — .. .. | நீரோடைக்கும் ரோட்டுக்குமாக விடப்பட்டது | 0 | 0 | 13 | —‡ |
| 5 | புளியமரத்தோட்டம் | செல்லாச்சி .. .. | தென்னந்தோட்டம் .. | 0 | 2 | 34 | 16 |
| 6 | குளக்கட்டுத்துண்டு .. | — .. .. | நீரோடைக்கும் குளக்கட்டுக்குமாக விடப்பட்டது | 0 | 2 | 14 | —‡ |

* இவைகள் தீர்க்கப்படும்.

† கந்தளாய்க்குளத்தால் இந்தக்காணிகளுக்கு ஊத்துக்கசிவு உண்டு. காணியை வாங்குபவர்கள் இப்போ வருடமொன்றுக்கு ஏக்கரொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஊத்துக்கசிவு வரி கொடுக்கவேண்டும். இந்த வரி தேசாதிபதியவர்கள் தகுதியென வறிந்து மாற்றப்படக்கூடியது.

‡ இவைகள் விற்கப்படமாட்டாது.

§ இந்தக்கண்டங்கள் பெரிய குளத்தால் நீர்ப்பாச்சப்படும். இப்போ வருடமொன்றுக்கு ஏக்கரொன்றுக்கு 2 ரூபாய் 28 சதம் வீதம் கட்டுவேலைக்காய்ப் பத்து வருஷத்துக்கும். தாபரிப்புக்காய் வருட மொன்றுக்கு ஏக்கரொன்றுக்கு 77 சதம் வீதமும் காணி வாங்குபவர்கள் வரிகொடுக்கவேண்டும். இந்த வரி தேசாதிபதியவர்கள் தகுதியென வறிந்து மாறறப்படக்கூடியது.

மேற்சொல்லிய காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்கள் நிலஅளவை கந்தோர் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தாரின் கந்தோர்,
கொழும்பு, 1920 ம் ஸ்ரீ சித்திரைமீ 28 ந் உ.

பீ. ஹோர்ஸ்பரோ,
அக்ற்றிங்கொலோனியல் சக்கிறுத்தார்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொது மலம் கழிக்கும் இடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 11,461. குறிச்சி—சித்தட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கஹம்பளேகுறுந்துவத்தை .. | தோட்டம் .. | கொழும்பு பிசப் பாதிரியாரின் .. | 0 0 4·77 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ஞு மெய்மாசம் 29 ந் தேதியிலன்று 11 மணிக்கு முற்பகல் மாத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1920 ம் ஞு ஏப்றில்மீ 22 ந் வ.

ஜே. எவ். ஆர். பிறவுனிங்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காத்தான் குடியில் அரசாட்சியாரின் தமிழ்ப் பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான் பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 5,519. குறிச்சி—காத்தான்குடியிருப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சவக்காலையடிவளவு .. | மூந்திரிகை மரமுள்ள பழையதோட்டம் .. | எம். எம். அப்துள் கரீம் | 0 2 7·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ஞு வைகாசிமாசம் 31 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு மட்டக்கழப்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்கழப்புக் கச்சேரி,
1920 ம் ஞு சித்திரைமீ 24 ந் வ.

சி. வீ பிறெயின்,
கீ. மா. அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொத்துகிராவில் கிணறுகட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 679. குறிச்சி—தம்பதேனிகற்பற்றில் உடபோலா மெடலசா
கோறளையில் இருக்கும் லாத்துகிரா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கலஇடம் .. | சேனை .. | ஜே. நாம்புநாச்சியும் மறுபேரும் .. | 0 0 6·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ஞு மே மாசம் 14 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1920 ம் ஞு சித்திரைமீ 22 ந் வ.

சி. ஆர். கம்பர்லன்ட்,
வடமேல் மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உல்வத்தையில் ஆண்பிள்ளைகள் சுதேச பாடசாலை கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 844. குறிச்சி—வேயுடவில்லி கற்பற்றில் மதுரைக்
கோறளையிலிருக்கும் தெல்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | செறுகலைகொட்டுவா .. | வயல் நிலம் .. | ரி. பி. டெல்வத்தா .. | 1 2 5·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புகொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ௵ மே மாசம் 14 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1920 ௵ சித்திரை௴ 22 ந் ௳.

சி. ஆர். கம்பர்லன்ட்,
வடமேல் மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

காள ஓயாவிலிருக்கும் உப்புக் காவற்காறனுடைய வீட்டைப் பழுதுபார்க்கும் வேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர், தங்கள் கேள்விப்பத்திரங்களை முத்திரித்த உறைகளிலிட்டு அவைகளின் இடது மூலையில் "காள ஓயாவிலிருக்கும் உப்புக் காவற்காறனுடைய வீட்டைப் பழுதுபார்க்கும் வேலையின் ஒப்பந்தக் கேள்வி" யென்றெழுதி வைகாசிமாதம் 10 ந் திகதி பிற்பகல் ஒருமணிக்கு முந்தி புத்தளம் உதவி ஏசண்டுத்துரை யவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

3. கேள்விக்காறன்தனது கேள்விப்பத்திரத்தை யனுப்ப முந்தி எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. இப்பத்து ரூபாய் கேள்விக்காறன் தனது கேள்வியேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் தான் வேலையை முடித்துப்போடுவதாக ஓர் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாக புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கைபண்ணிக்கொண்ட நாலு கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்.

உழுத்தும் பழுதாயும்போன கிடுகு மரம் முதலியவற்றையெடுத்துப்போட்டுப் புதிய மரம் முதலியவற்றைப் போடவேண்டும்.

வீடுகளின் கூரையை வேயவேண்டும்.

வீட்டின் சிவருக்குப் பூச்சுப்பூசி வெள்ளையடிக்கவேண்டும். வெளிவீடுகளுக்கு வெள்ளையடிக்கவேண்டும்.

தார், மை பூசி கதவு, யன்னல் பழுதுபார்க்கவேண்டும்

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி ஏசண்டருக்காக.

புத்தளங் கச்சேரி,
1920 ௵ சித்திரை௴ 22 ந் ௳.

---

H. R. COTTLE, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.